**பிங்கிரிய பிரதேச சபையின் - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பிங்கிரிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து பிங்கிரிய பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடன்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கும் போது சபையின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள்,

புததகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதா,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா,

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த மல்டி மீடியா இயந்திரத்திற்கான கடன்கொடுத்தோர் ரூபா 200,000 மற்றும் போட்டோ பிரதி பண்ணும் இயந்திரத்திற்கான கடன்கொடுத்தோர் ரூபா 40,000 ஆக கடன்கொடுத்தோர் ரூபா 240,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | அடுத்துவரும் காலங்களில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமானது என இனங்காணப்பட்ட 03 காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்படடிருக்காததுடன் 04 | ஒரு காணியை உறுதியாக இனங்காண முடியாதுள்ளது எனவும் இன்னுமொரு காணி முழுவதுமாக 01 ஏக்கர் | சொத்துக்களை இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.. |

| | | |
|---|---|---|
| காணிகளின் மொத்த பெறுமதி ரூபா 400,500 நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை . | 02 ரூட் அளவானவை ஏலமிடப்பட்டுள்ளது எனவும் அதன் மூலம் சபைக்கு பொதுவான பகுதி கிடைத்திருக்கவில்லை எனவும் ஏனைய காணிகளின் பொதுக் காணியானது வீதி எனவும் மதிப்பீட்டுக் குழுவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | |

### 1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,092 பெறுமதியான தீர்த்துவைக்கப்படாத 05 முற்பணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணக்கமின்மைகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மீதியினை அடிப்படையாகக் கொண்டு கணக்குகளைத் தயாரித்தல் வேண்டும். |
| ஆ) | வைப்பு பதிவேட்டிலுள்ள வைப்பு மீதிக்கும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிக்குமிடையே ரூபா 6,296,357 இணக்கமின்மை காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்கில் சரி செய்யப்படும். | சரியான மீதிகளை உள்ளடக்கி கணக்கு தயாரிகசுப்படுதல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்னைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிதிப்பிரணமாக கோவை | | | |
| (i) 371 ஆம் பிரிவு | சபையினால் 2018 இற்கு முன்னர் வழ்ங்கிய ரூபா 358,252 பெறுமதியான 16 முற்பணங்கள் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 571 ஆம் பிரிவு | காலங்கடந்த ரூபா 1,330,629 பெறுமதியான வைப்புக்களை தீர்த:துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 77,412,376 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 10,348,736 ஆகும்.

## 2.2 நிதி கட்டுப்பாட்டு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கி கணக்கிணக்க கூற்றுக்கு இணங்க பல ஆண்டுகளாக இனங்காணப்படாத ரூபா 181,846 மீதியினை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி மீதி தொடர்பான தகவல்களை தேடிப்பார்ப்பதற்கு முடியாதுள்ளது. | உரிய மீதியினை துரிதமாக இனங்காண்பதற்கும் தீர்த்துவைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் சேவண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமான ம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவா றான மொத்த நிலுவை பட்டியலிட ப்பட்ட வருமானத் தில் | மதிப்பீடு செய்யப் பட்ட வருமான ம் | பட்டியலிட ப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவா றான நிலுவை பட்டியலிட ப்பட்ட வருமானத் தில் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| வீத வரியும் வரியும் | 4,692 | 1,707 | 3,209 | 179 | 4,602 | 1,707 | 4,923 | 244 |
| வாடகை | 20,872 | 6,629 | 14,525 | 118 | 19,594 | 6,353 | 15,098 | 1,846 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,802 | - | 1,564 | - | 1,622 | - | 1,671 | - |
| ஏனைய வருமானம் | 115,603 | - | 84,637 | - | 84,064 | - | 62,085 | - |
| மொத்தம் | 142,969 | 8,336 | 103,935 | 297 | 109,882 | 8,060 | 83,777 | 2,090 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 அதிகாரச் சட்டத்தால் ஒப்படைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொதுப்பயன்பாட்டு சேவைகள் மற்றும் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்தலும், நிருவகித்தலும், மக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரிகள் முதலிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **துணை நியதிச்சட்டம்** | | |
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை நியதிச்சட்டம் விதிக்கக்கூடியதாக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் 28 விடயங்கள் சம்பந்தமாக துணை நியதிச்சட்டம் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | துணை நியதிச்சட்டத்தினை தயாரிப்பதற்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதுடன் ஏனைய துணை நியதிச்சட்டங்களை அடுத்து வரும் காலங்களில் விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்குரிய துணைநியதிச சட்டத்தினை விதிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 3.2. முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர் 2020 பெப்ரவரி 19 ஆந் திகதியிலிருந்து சபையின் சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்பாடல் படியாக ரூபா 99,500 பணம் சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர் மீதென்வல ஆயுர்வேத வைத்தியசாலைக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு உரிய பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் ஏலவிற்பனைக் காணி 04 ஏக்கர் 03 ரூட் 29.1 பேச்சர்ஸ் இல் வீதிக்கான காணித் துண்டினைத் தவிர்த்து மிகுதிக் காணித்துண்டின் அளவான 701 பேச்சஸில் பொதுப் பகுதிக்காக வழங்கப்பட வேண்டிய 10 சதவீத அளவான 70.1 பேச்சஸ் இற்காக 8624 ஆம் இலக்க உறுதியின் மூலம் 64 பேச்சர்ஸ் அளவானவை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 6.1 பேச்சஸ் | துண்டுபோட்டு விற்கும் போது சபைக்கு வழங்க வேண்டிய பொதுக் காணிப் பகுதியின் மிகுதியான 6.1 பேச்சஸிற்காக அக்காணிப் பகுதியின் பெறுமதியை செலுத்துவதற்கு அந்த நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சபைக்கு கிடைக்க வேண்டிய பொதுக் காணியின் அளவினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறைத்து சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே அந்தக் காணியின் மூலையில் உள்ள பெறுமதி குறைந்த ஒரு காணிப் பகுதி பொதுக்காணிப் பகுதியாக சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2022 ஆம் ஆண்டிற்காக 19 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொண்டிருக்கவில்லை ல. | 19 நிறுவனங்கள் சுற்றாடல் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொண்டிருக்கவில் லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவதற்காக முறையான நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய மீதி ரூபா 993,578 ஆக இருந்ததுடன் அவற்றில் ரூபா 764,557 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதியாகும். | இப்பணத்தை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மீதிகளை துரிதமாக அறவீடு செய்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 04 கணக்கு மீதிகள் தொடர்பாக ரூபா 44,032,341 செலுத்த வேண்டிய மீதி காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 11,400 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய மீதியாகும். | பரீட்சித்துப் பார்த்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை மீதியை துரிதமாக தீர்த்துவைத்தல் வேண்டும். |

## 3.3 ஊழியர் கடன்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| சேவையை கைவிட்டுச் சென்ற ஒரு ஊழியர் தொடர்பான ரூபா 7,500 ஊழியர் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்படாது காணப்பட்டது. | இணக்க சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள் பொருதிகள் தொடர்பாகவும் இயந்திரங்கள் உபகரணங்கள் தொடர்பாகவும் நிலைான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்காததுடன் மோட்டார் வாகனங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பேணப்படுகின்ற 02 காணி ஆதனங்களும் சபைக்கு அன்பளிப்பாகக் கிடைத்த 02 வாகனங்களும் சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதிக் காணிகள் முறைப்படியாக பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததனால் அதற்காக பிரதேச செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை சபையினால் பொறுப்பேற்றல் வேண்டும். |
| (இ) | சபையின் காணிச் சொத்துக்கள் தொடர்பாக முறைப்படியாக மீளாய்வு செய்யப்பட்டிருக்காததுடன் சபையின் காணிகளில் முறைப்படியாக எல்லைகள் குறிக்கப்பட்டு அச்சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் பாதுகாப்பு போதியளவில் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.5 வாகன முகாமைத்துவம்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ரூபா 7,175,000 பெறுமதிகு கணக்குகளில் காட்டப்பட்டுள்ள சபையின் 04 மோட்டார் வாகனங்கள் மோட்டார் வாகன பதிவுசெய்தல் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படவில்லை. | குறைபாடுகள் பரீட்சிக்கப்பட்டு சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய வாகனத்தை முறைப்படியாக பதிவுசெய்தல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாட்சியும்.

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 03 வருமான விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்குமிடையேயான முரண்கள் 30 சதவீத்திலிருந்து 149 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டதுடன் 93 செலவு விடயங்களின் பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் 60 சதவீத்திற்கும் குறைந்த நிதி ஏற்பாட்டுப் பணம் மாத்திரம் மீளாய்வாண்டில் செலவு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பாதீட்டினை ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்துதல் வேண்டும். |